## சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் - 2016

---

சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 9/574 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலம் என்பன

---

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 09 வீதிகளின் 144 கிலோமீற்றர் பிரிவுகளினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 10,628 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 81.75 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 60 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு அபிவிருத்திக்கான சவூதி நிதியம் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 யூன் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்.

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்.

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் செயற்திட்ட கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்.

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஊ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்.

(எ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் வழங்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, நேரடி செலுத்துகைகளுக்கு ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட்ட பற்றுதலுக்கான விண்ணப்பங்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கி நடக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2016 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொ மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ மில். | ரூபா மில். | ஐ.அ.டொ மில். | ரூபா மில். |
| எஸ்எவ்டீ | 60.00 | 7,800 | 1,900.00 | 12.61 | 1,524.38 | 49.71 | 6,462.11 |
| ஜிஓஎஸ்எல் | 21.75 | 2,828 | 100.00 | - | 62.13 | - | 238.69 |
| **மொத்தம்** | **81.75** | **10,628** | **2,000.00** | **12.61** | **1,586.57** | **49.71** | **6,700.80** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்ட தகவலின் பிரகாரம், 02 தொடக்கம் 13 மாதங்கள் வீச்சிலான தாமதத்துடன் 06 ஒப்பந்த பொதிகளின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வீதிப் பிரிவுகளின் புனர்நிர்மான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், வேலைகளினைப் பூர்த்தி செய்வதில் தாமதங்கள் மற்றும் வேலையின் பரப்பெல்லையின் மாற்றங்கள் காரணமாக, ரூபா 66.82 மில்லியன் கூட்டுத்தொகையான மேலதிக மேந்தலை கட்டணங்கள் நேரிட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன் அதிகாரங்கள் இன்றி அலவத்துகொட – பலபத்வல வீதியின் புனர்நிர்மான வேலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பரப்பெல்லையின் மாற்றங்கள் மீது ரூபா 334.03 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்துகைகளினை தீர்ப்பனவு செய்வதற்கு 2016 மார்ச் 23 இல் நடாத்தப்பட்ட அமைச்சரவையின் கூட்டத்தில் வழிகாட்டப்பட்டவாறு 2016 ஏப்ரல் 22 இல் புதியதொரு உடன்படிக்கையினை ஏற்படுத்திக்கொள்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 2015 ஒக்தோபர் 08 இல் பூர்த்தியாக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், காணி கொள்வனவுக்கான செலுத்துகைகள் தாமதமடைந்திருந்ததுடன் அவற்றிக்கான இழப்பீடுகள் 2017 யூன் இறுதி வரையேதும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவொன்றாக, குறிப்பிடத்தக்கதாக வட்டித் தொகை காணி உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், செலுத்த வேண்டிய வட்டி தொடர்பிலான விபரங்கள் மற்றும் செலுத்துகைகளினை தீர்ப்பனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

பெஹலியகொடையிலிருந்து – கிரிபத்கொட வீதி வரை புனர்நிர்மாண பிரிவின் நோக்கத்திற்கு ரூபா 1.69 மில்லியன் கிரயமொன்றில் ஒப்பந்தக்காரரினால் வீதி அடையால பலகைகள் மற்றும் இரும்பு பாதசாரி பாதுகாப்பு வேலிகள் மற்றும் ஏனையவை கொள்வனவு செய்யப்பட்டதுடன் கம்பஹாவிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வளாகத்தில் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமொன்று இன்றி செயற்திட்டத்தினால் ஏனைய உதவி வழங்கும் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆலோசகர் ஒருவரின் சேவை பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வாகன வாடகைக் கட்டணங்களாக ரூபா 280,000 தொகை செலுத்தப்பட்டது.